நல்லாட்சி அல்லாவிடினும் நல்லாதரவு தேவையாம்!

அறிஞர் பலர் கூடி அழகுற அமைத்த ஆட்சியென அழகுப் பேச்சு!

Phone No 4502
விலை அரை அணா

Regd. No.M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (14—2—50) வெளியூர் (15—2—50) [இதழ் 168

புதிய அரசியலுக்குச் செங்கல்வராயன் சப்பைக்கட்டு

நாம் புது அரசியல் அமைப்பின் கீழ் வாழ வேண்டும். இந்த அமைப்பு அந்நியனால் நமக்களிக்கப்பட்டதல்ல, அறிவு பெற்ற நாட்டறிஞர் பலர் மூலம் நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒன்று. இந்த அமைப்பு நாட்டுக்குப் பொருந்தாது என்று சில தோழர்கள் கூறியபோதிலும், நம்மால் உருவாக்கப்பட்டது. ஆதலின் உகந்தது மட்டுமல்ல, உயர்ந்தது என்று கூட நான் கருதுகிறேன். ஆகவே அதை அழகுபட நடத்துவது நமது கடமை. அமைப்பின் சிறப்பிற்காக நாம் பாடுபட வேண்டியதில்லை. நமது முன்னேற்றத்திற்காக அமைப்பை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதன்கண் அடிப்படை உரிமைகள் பல உள்ளன. ஆனால் அவற்றை அடைவதற்கு, அனுபவிப்பதற்கு நாம் செய்யவேண்டிய அடிப்படை கடமைகளும் உள்ளன என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். கடமைகள் வளர்ந்தால், உரிமைகள் வளரும் என்பதை அறியவேண்டும். தன் கடமையைச் செய்யாத எவனும் உரிமையைப் பற்றிப் பேச தகுதியற்றவனாவான்.

என்று சென்னையில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் வரவேற்புரை வழங்கும்முறையில் பேசியிருக்கிறார் தோழர் செங்கல்வராயன். மாநாடு அரசியல் மாநாடல்லவா? ஆகவேதான் இன்றைய அரசியலுக்கு அழகான மூலாம் பூசும் அரும்பணியில் அவர் ஈடுபட்டிருக்கிறார் போலும்!

நாம் புது அரசியல் அமைப்பின்கீழ் வாழவேண்டுமாம். ஆம்; வாழத்தானே வேண்டும்! வாழாமல் முடியுமா? ஆனால், அந்த வாழ்வு வாழ்வாக இருக்க வேண்டுமே! இருக்குமா-இருக்கத்தான் ஏதுவுண்டா? இந்தப் புதுஅரசியல் திட்டத்தில் யதேச்சாதிகார வாடை வீசுகின்றது என்பதை பல அரசியல் அறிஞர்களே சுட்டிக் காட்டியுள்ளனர்.

இங்ஙனம் குறைபாட்டுக் குறித்தான ஓர் ஆட்சி முறையைத் தோழர் செங்கல்வராயன் அழகுபடுத்திக் கூறும் முறையை மேலும் பாருங்கள்.

இந்த அரசியல் உயர்ந்த அரசியலாம். ஏன், எப்படி என்று கேட்கிறீர்களா? அதற்கு அவர் தரும் விடையைப் பாரீர்; "இது அந்நியரால் நமக்களிக்கப்பட்ட அரசியல் அல்ல; நம்நாட்டு அறிஞர் பலர் மூலம் நாமே ஏற்படுத்திக்கொண்ட ஆட்சிமுறை இது இந்நாட்டிற்குப் பொருந்தாது என்று சொல்லப்பட்ட போதிலும், நம்மால் உருவாக்கப்பட்டது என்ற ஒரே காரணத்தால் இதனை உகந்தது, உயர்ந்தது என்கிறேன்" என்கிறார்.

இது எந்த அளவுக்கு உண்மை? 'நாம்' என்று யாரைக் குறித்துப் பேசுகிறார் தோழர் செங்கல்வராயன் என்று கேட்கிறோம். நாடாள்வோரெல்லாம் நம்மவராய் விடுவரா? இவ்வரசியலை நமக்களித்தவர் அந்நியரல்ல; நம்மவரே; என்று சொல்லிவிட்டால் போதுமா? வெள்ளையர் தான் அந்நியர்; பிறரெல்லாம் நம்மவர் என்று சொல்லப்படுமானால், அதனைப் பேதமை என்றே சொல்லவேண்டும்.

மார்வாரி, குஜராத்தி போன்ற வடநாட்டவரெல்லாம் எங்ஙனம் நம்மவராய் விடுவர்? நமது நலத்தில்-திராவிடத்தின் நலத்தில் அவர்களுக்கு எங்ஙனம் பற்றுதலும் பாசமும் இருக்க இயலும்? அப்படிப்பட்டவர்களால், அல்லது அப்படிப்பட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளோரால் வகுக்கப்பட்ட ஒரு அரசியல் நம்மவருக்கு எங்ஙனம் நலம்பயப்பதாகும் என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணுமுன் இப்பது அரசியலை நமது அரசியலென்றோ, நம்மவரால் ஆக்கப்பெற்றது என்றோ முடிவுகட்டுவது முற்றிலும் தவறு.

தமிழ் நாட்டின் பிரதிநிதிகள் என்ற முறையிலே கோபால்சாமி அய்யங்கார்களும், சந்தான அய்யங்கார்களும் அரசியல் நிர்ணய அவையில் இடம் பெற்றுவிட்டால் போதுமா? அவர்கள் எப்படிப்பட்டவர்கள், எவ்வழித் தோன்றல்கள், இத்தமிழ்நாடு பற்றி அவர்களுக்கு எந்த முறையிலே எந்த அளவிலே அக்கரை இருக்க முடியும் என்பன போன்ற விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டுமன்றோ?

அதுமட்டுமல்ல; இந்த அரசியலை நிர்ணயிக்கச் சென்ற அன்டர்கள் எத்தகைய ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் என்பதும், கவனிக்க

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

இந்த வாரத்தில் திபேத் தாக்கப்படும்?

செஞ்சீனா திட்டமிட்டுள்ளதாம்!

லண்டன், பிப். 3—

காலநிலை அனுகூலமாக இருக்கும் பட்சத்தில் திபேத்-சிங்காய் எல்லையிலுள்ள மா-சே-துங்கின் கம்யூனிஸ்ட் துருப்புகள் இவ்வாரம் திபேத் மீது படையெடுத்து விடும் என்று 'ஸண்டே டெஸ்பாட்ச்' ராஜதந்திர நிருபர் கூறுகிறார்.

திபேத் மன்னர் தலாய்லாமாவுக்கு வெளி ஆதரவு கிடைக்கக் கூடும் என்று தோன்றுவதால், இப்படையெடுப்பைத் திபேத் முறியடித்து விட முடியும் என்று நம்பலாம் என அந்நிருபர் கூறுகிறார்.

இந்தியாவுக்கு காற்றடி இயந்திரம்

லண்டன், பிப். 13—

காற்றினால் இயக்கப்படும் 'விண்ட் மில்கள்' பிரிட்டனின் நல்ல ஏற்றுமதிப் பொருளாகி வருகிறது. இதற்கு இந்தியா, கிரீஸ், ஆப்பிரிக்கா மற்றும் டாலர் பிரதேசங்களிலிருந்தும் ஆர்டர் கிடைத்திருக்கின்றன.

ஒரு பிரிட்டிஷ் கம்பெனி இவைகளைத் தயாரித்து மாண்டிவிடோவுக்கு அனுப்பியிருக்கிறது. மற்றும் 200க்கு மேற்பட்ட விண்ட் மில்களுக்கு இக்கம்பெனியிடம் ஆர்டர் தரப்பட்டிருக்கிறது.

ஆர்டிக் பிரதேசத்தில் இராணுவ ஒத்திகை

உணவுப் பிரச்னையைச் சமாளிக்க அதிசய முறை

ஆர்டிக் பிரதேசத்தில் நடைபெறும் ராணுவ ஒத்திகையில் கனடா, யு.எஸ். துருப்புகளும், விமானங்களும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. கனடா, யு.எஸ். படைகள் அவசர சமயத்தில் எப்படி ஒத்துழைக்கமுடியும் என்பதைத் தெரிந்துகொள்ளவே இந்த ஒத்திகை நடத்தப்படுகிறது.

இடு சரிவங்களுக்குப் பயன்படும் மெழுகுவத்தி

ஆர்டிக் பிரதேசத்தில் உபயோகிப்பதற்காகவே ஒருவித மெழுகுவத்தி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. உணவு சப்ளை இல்லாத நேரம் சமயத்தில் இந்த மெழுகுவத்தியையே உணவாகக் கொள்ளலாமாம். இதை எரிக்கவும் விடமுடிகிறதாம்.

போலந்தில் போர்ப்படை மும்முரம்

இவ்வாண்டு இரட்டிப்புச் செலவு

போலந்தில் மும்முரமான இராணுவ ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக இங்குசெய்திகள் கிடைத்திருக்கின்றன- இவ்வாண்டு இராணுவச் செலவை இரட்டிப்பாக்க போலந்து பார்லிமெண்ட் அங்கீகாரம் அளித்திருக்கிறது. மேற்கு போலந்தில் மட்டும் 16 விமானநிலையங்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன. ராணுவ தளங்கள், ஆக்கிய ஸ்தாபனங்கள் செப்பனிடப்படுகின்றன.

இராணுவ சர்வீஸ் காலம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதுடன் உதவிப் படைகளில் பெண்களும் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

அணு ரகசியங்களைப் பாதுகாக்க பிரிட்டனில் கெடுபிடி

அணுசக்தி மாநாட்டு உறுப்பினர்கள் மேலும் சோதனை!

லண்டன், பிப் 13—

அணு ரகசியங்கள் எதுவும் வெளியே போகாதபடி காப்பாற்ற, மிகதீவிரமான நடவடிக்கைகள் பிரிட்டனில் எடுக்கப்பட்டிருக்கிறது.

அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆண்களும் பெண்களும் ரகசியங்களை வெளியிடாதபடி கண் காணிக்கப்பட்டு வருகின்றனர். அமரிக்க போலீஸைச் சேர்ந்த மூன்று ஸீனியர் மெம்பர்களும் இவ்விஷயமாக 'ஸ்காட்லாண்ட் யார்டு'க்கு உதவி புரிந்து வருகின்றனர்

அணுசக்தி சம்பந்தமான மாநாட்டில் கலந்துகொண்ட யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடா, பிரிட்டன் பிரதிநிதிகள் வெளியே வரும்போது சோதனையிடப்பட்டு கண் காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கம்யூனிஸத்தை எதிர்க்க....

கம்யூனிஸத்தை எதிர்க்க இருக்கும் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்த போப்பாண்டவர் உத்தேசித்திருக்கிறார் என்றும், பிராடெஸ்டெண்ட் நாடுகளிலுள்ள பாதிரிகளுக்காகசில உத்தரவுகளைச் வெளியிடுவார் என்றும் இது ஐந்துமொழிகளில் மொழிபெயர்க்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

தேர்தல் முடிவுகளைத் திரையில் காணலாம்!

(0)

பிரிட்டனில் ஏற்பாடு

லண்டன், பிப். 13—

பிரிட்டிஷ் தேர்தலில் பதிவான வோட்டுகளை எண்ணும் தினமான பிப்ரவரி 22-ந்தேதி இரவு பிரிட்டனில் எல்லா சினிமாக்களும் திறந்து வைக்கப்பட்டு, முடிவுகள் அவ்வப்போது கிடைப்பதைத் திரையில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரபல லண்டன் ஹோட்டல்களும் இம்முடிவை அவ்வப்போது தெரிவிக்க ஏற்பாடு செய்து வருகின்றன.

ரஷ்யப்பகுதிக்கு இரும்பு அனுப்ப மேற்கு ஜெர்மனி தடை

பெர்லின், பிப். 13—

ரஷ்ய ஜெர்மன் பகுதிக்கு இரும்பு சப்ளை அனுப்புவதை மேற்கு ஜெர்மனி தடை செய்திருப்பது பற்றி கம்யூனிஸ்டு விளம்பர மந்திரி ஹெர்ஷ்லர் கூட்டத்தில் இதற்குத்தக்க பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால் என்ன விதமான பதில் நடவடிக்கை என்று அவர் கூறவில்லை.

கோழித் திருட்டைக் கண்டுபிடிக்க வழி!

லண்டன். பிப். 13—

பிரிட்டனில் கோழிகள் மட்டும் ஆண்டில் ஆயிரத்திற்கு மேல் திருட்டுப்போகின்றனவாம் இதைத் தடுக்க கோழிகளுக்குப் பச்சை குத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

லண்டன், பிப். 13—

கல்கத்தாவில் காலமான பிரபல வக்கீல் பி. எல் மித்திரன் திறமையைப் பாராட்டி இந்தியன் சட்டத் துறையிலேயே அவருடைய மறைவு பெரும் நஷ்டம் என்று லண்டன் டைம்ஸ் எழுதியிருக்கிறது.

மாலை மணி

சென்னை 14—2—50 செவ்வாய்க்கிழமை

அண்ணாமலையாருக்கு அர்ப்பணம்!

அவரவருடைய அறிவையும், அதுபற்றி அவரவர்கள் கொண்டிருக்கும் உணர்வையும் கணக்கிட்டு, மக்களைப் பிரித்துக் காண முற்படும்போது பல்வேறு வகையினராகக் காணப் படுகின்றனர்.

முழுதும் அறிந்தவர்கள்—தங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று அவர்களுக்கே தெரியும். அப்படிப்பட்டவர்கள் பிறர்க்கு வழிகாட்டிகளாக இருப்பர்; அவர்கள் உள்ளபடியே போற்றுதலுக்குரியராவார்கள்.

முழுதும் அறிந்தவர்கள்—ஆனால் அவர்களுக்கே தெரியாது தங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று அப்படிப்பட்டவர்கள் தூண்டுதலின் பேரில் தங்களை உணர்பவர்கள்—பரிதாபத்திற்குரியவர்கள்.

முழுதும் அறியாதவர்கள்—தங்களுக்கு முழுதும் தெரியாது என்று அறிந்து அந்த உணர்வோடு நடப்பவர்கள். அப்படிப் பட்டவர்கள் நல்லவர்கள்—நம்பிக்கைக்குரியவர்கள்.

முழுதும் அறியாதவர்கள்—ஆனால் தங்களுக்கு முழுதும் தெரியாது என்பது அவர்களுக்கே தெரியாது. எல்லாந் தெரிந்திருப்பதாகப் பாசாங்கு செய்வர் அத்தகையோர் அபாயத்தின் அறிகுறிகள் - பிறரால் எச்சரிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த நால்வகைப் பிரிவினரில் நாலாவது வகையினர். மனித சமுதாயத்தின் அபாயக் குறிகள் மட்டுமல்ல, அவமானத்தின் சின்னங்களாகக்கூட கருதப்பட வேண்டியவர்கள். இத்தகையோர் பொதுவாழ்வில் ஏராளமான அளவில் நடமாடுகின்றனர். குறிப்பாகத் தமிழ்நாடு காங்கிரஸ் அரங்கில், இந்த நாலாவது வகையைச் சேர்ந்தவர்கள் பெரு அளவில் தலைவர்களாக இருந்து காட்சியளித்து வருவது உலகு அறியும் உண்மையாகிக்கொண்டு வருகிறது. இந்த உண்மையைத் தெளிவாக்கிவிட்டார் தோழர் என். அண்ணாமலையார், தமிழ்நாடு காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்குத் தலைமை வகித்துத் தமது அரிய தலைமையுரையை ஆற்றியதன் மூலம்.

ஏதும் அறியாதவர்கள் எல்லாம் அறிந்ததாக எண்ணிக் கொண்டு தம் எட்டிப் பிடித்து நிற்க முடியாத நிலைகளிலெல்லாம் நின்று பார்க்கத் துணிவுகொண்டு, ஏதேதோ கூறுவர். அவை வெறும் காதுக் குடைச்சலாக இருக்குமேயல்லாது, கருத்துப் பொதிந்தனவாக இரா. அது போன்று தோழர் அண்ணாமலையாரின் தலைமையுரை—சொற்கூட்டத்தின் கூச்சலாக அமைந்திருக்கிறதே யொழிய பொருளாழம் கொண்டதாக அமையவில்லை. "நுணலும் தன்வாயால் கெடும்" என்பதற்கிணங்க, ஏதேதோ உளறிக் கொண்டு செல்லுகையில், திராவிடஸ்தான் கிளர்ச்சி பற்றியும் சில கூறி, தன் அறியாமையை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

'கம்யூனிசத்திற்கு அடுத்த அபாயம் திராவிடஸ்தான் கிளர்ச்சி' என்று கூறி பூரிப்படைகிறார், மனித சமுதாய முன்னேற்றத்திற்கு அபாயக் குறியாக விளங்கிவரும் தோழர் என். அண்ணாமலையார். திராவிடஸ்தான் கிளர்ச்சி உள்ளபடியே ஒரு சிலருக்கு—ஒரு சிலவற்றிற்கு அபாயமாகத்தான் காட்சியளிக்கிறது! அறியாமை-இல்லாமை-போதாமை-பிணியுடைமை-வறுமை-பசி—பட்டினி—மூடப் பழக்க வழக்கம்-குருட்டு நம்பிக்கை ஆகியவற்றிற்கும், சுய நலமிகள்—பட்டம் பதவியையே நோக்கமாகக் கொண்டவர்கள்-அடிமைக்கும் பாசிசத்துக்கும் துதி பாடுவோர் ஆகியோர்க்கும் திராவிடஸ்தான் கிளர்ச்சி அபாயத்தின் அறிகுறியாகத்தான் விளங்கும், ஏனைய நல்லெண்ணங் கொண்ட நல்லறிவுடையோர்க்கு அது தென்றலாகத்தான் இருக்கும்! திராவிடஸ்தான் கிளர்ச்சியின் உட்கிடக்கையை அண்ணாமலையார் எப்படி அறிந்துகொள்ள முடியும்? அவர்தான் சிந்தனைக்கு வேலை கொடுக்காத 'செம்மலா'யிற்றே! மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப்போல, தோழர் அண்ணாமலையாருக்குத் திராவிடஸ்தான கிளர்ச்சியும் அபாயமாகத் தோன்றுகிறது! பரிதாபம், அவர்தான் என்ன செய்வார். புரிந்துகொள்ள ஆற்றல் இருந்தால்தானே! ஆகையினால்தான், அடுத்துக் கூறுகிறார், **'திராவிடஸ்தான் கிளர்ச்சி அர்த்தமற்றப் பிரசாரம்'** என்று

திராவிடஸ்தான் கிளர்ச்சி பற்றி அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத அண்ணாமலையார், நம்மை அண்டி அதற்கு அர்த்தம் கேட்டிருக்கலாம்; அவ்வளவுக்குத் துணிவில்லையோ அல்லது பாடங் கேட்டாலும் தன்னால் புரிந்துகொள்ள இயலாது என்ற அவநம்பிக்கையோ, தெரியவில்லை! ஆகவேதான் புரிந்துகொள்ள மறுக்கும் கூட்டத்தவரிடை நின்று; புரிந்துகொள்ளாதவர் ஏதேதோ புலம்பியுள்ளார்!

அகில உலகத்தையும், அதில் நிகழும் நிகழ்ச்சிகளையும் அதிகமான அளவுக்குத்தான் அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை என்றால் அறிந்து கொண்ட கொஞ்ச நஞ்ச அளவிலாவது தெளிவிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை.

"இந்திய நாடு துண்டாடப்பட்டதனால் ஏற்பட்ட கலவரமும் ரத்தக் கிளறியும்தான் திராவிடஸ்தான் பிரசாரம் மூலம் நாம் அடையப்போகும் நலன்" என்று கூறுகிறார்! ஆகா, எவ்வளவு தெளிவு', குதிரைக்குக் குர்ரம் என்றால்! ஆனைக்கு அர்ரம் என்னும் அரிச்சுவடிப் பாடம் தவறான முறையில் பயில ஆரம்பிக்கிறார் தோழர் அண்ணாமலையப்பர். 'கலவரமும், ரத்தக்கிளறியும்தான் பாக்கிஸ்தான் பிரிவதற்கு முன்பு இருந்தனவே; நாடு பிரிக்கப்படுவதற்கு அவைதான் காரணமாக இருந்தன, நாடு பிரிந்தவுடன் முன்பிருந்தே நடைபெற்றக் கலவரமும், ரத்தக்கிளறியும் தொடர்ந்து சிறிது நாட்கள் நடைபெற்றன: இப்பொழுது அடங்கிவிட்டன. ஆனால், திராவிடஸ்தான் கிளர்ச்சியோ எனில், அறிவு அன்பு, அமைதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகிறது. திராவிடம் பிரிந்தால் அந்த அறிவும், அன்பும், அமைதியுந்தான் நிலவுமேயல்லாமல் கலவரமும், இரத்தக்கிளறியும் ஏற்பட வழியுமில்லை, வகையுமில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளை ஒத்திட்டுப் பார்க்கும் ஆற்றல் படைத்தோர்க்கே இந்தத் தெளிவானநிலைமை புரியக்கூடுமேயல்லாது அறிவுவளர்ச்சியைப் புறக்கணிக்கும் அண்ணாமலையார் போன்றவர்களுக்கு எங்கிருந்து புரியப்போகிறது? தன்னைத்தானே அலசிப்பார்த்துக் கொள்ளும் அளவில், தோழர் என் அண்ணாமலையார் போன்றவர்கள் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். முயற்சி புரிய மறுக்கின்றனர். எனவேதான் அவரது பேச்சில் உளறல்கள் மலிந்திருக்கின்றன. அர்த்தம் புரிந்துகொள்ளாமல் பேசுவதைவிட பேசாமல் **"சிந்தை அடக்கிச் சும்மா இருத்தல் நலம்"** என்ற அறிவுரையைத் தோழர் **அண்ணாமலையாருக்கு அர்ப்பணிக்கிறோம்.**

அறிவுக் கதிர்!

உயிர்ப்புள்ள சொற்போரும், தொடர்புள்ள சொற்பொழிவும் இருவேற இயற்கையன. பொறுமையற்ற தன்மையும், அமைதியற்ற மனமும் உடைய பலர், ஒரு கூற்றின் முடிபை அறிய ஒரு நொடியேனும் நில்லாராகவும், ஒரு சொல்வழக்கின் ஒழுங்கைப் பின் சென்று கருதாராகவும், இருக்கின்றனர். அளவளாவலின் விரைவில் அன்னவர்தம் கருத்துக்கள் ஒருவாறு பொருள் தந்துநிற்கின்றன; ஆயின், இடைப்பட்டு எண்ண நேரின், பொருட்போக்கில் பெரும்பிளவுகள் நேரும். தக்க சொற்களைத் தேர்தற்குள் அவர் சொல்லவிரும்பிய கருத்து மறதிவயப்படும்.

—மாண்டெஸ்க்யு

ஐ. நா.-வுக்கு சொந்த கட்டிடம்

இப்பொழுது நியூயார்க்கில் கட்டப்பட்டு வரும் ஐ. நா செக்ரேடேரியட் கட்டிடம் இவ்வருஷம் திறக்கப்பட்டு விடும் என்று அமெரிக்காவில் எஞ்ஜினியர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது.

லண்டன், பிப். 11—ரஷ்யாவிலிருந்து நீ பெட்டிலைன் இறக்குமதி செய்ய விரும்பும் பிரிட்டிஷார் ஜூன் லைசென்ஸ் கொடுக்கப்படும் என்று பிரிட்டிஷ் வர்த்தக போர்டு அறிவித்திருக்கிறது.

வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா?

—(0)—

தொழிலாளரைக் கண்காணிக்க டெலிவிஷன் உதவி!

நியூயார்க், பிப். 13—தொழிற்சாலையில் தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்பதை அவர்களுக்குத் தெரியாமல் இருந்த இடத்திலிருந்தே முதலாளிகள் அறிந்து கொள்ள டெலிவிஷன் மூலம் ஒரு புது வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் ஒருவர் பல மைல்களுக்கப்பாலுள்ள இடத்தில் வேலை செய்யும் தன் சிப்பந்தி திடீரென நேராகப் பேசலாமாம். அவர்களும் பேசுபவரைப் பார்க்க முடியும். கேபிள் மூலம் டெலிவிஷன் கிரணம் பாய்வதால் வெளியார் இதில் எவ்வித குறும்புத்தனமும் செய்ய முடியாது.

அயல் நாட்டில் கல்வி கற்போருக்கு ஆதரவு

கேப்டவுன், பிப். 13—இந்தியாவுக்கும் இதரநாடுகளுக்குமிடையே கலாசார உறவு ஏற்படுத்துவதற்காக காமன்வெல்த் இதர நாடுகள் சேர்ந்து 21 நாடுகளிலுள்ள இந்திய அயல்நாட்டு மாணவர்களில் 70 பேர்களுக்கு உதவிச் சம்பளம் கல்விகற்க கொடுப்பதென்று இந்திய சர்க்கார் திட்டமிட்டுள்ளது.

இதன்படி மாதம் ரூ. 200 அம்மாணவர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். இவர்கள் கல்வி முடிந்ததும் இந்தியாவிலேயே தங்கியிராமல், அவரவர்களுடைய நாடுகளுக்குச் சென்றுவிட வேண்டும்.

இதன்படி ஆப்பிரிக்காவில் 4 இந்தியர்கள் 6 ஐரோப்பியரல்லாதவர்கள் ஒரு வர்ணநிற மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற்றிருக்கின்றனர்.

இருநூற்றாண்டுகள் உயிர்வாழலாம்!

பிரிட்டிஷ் இரசாயன சங்கத் தலைவர் கூற்று

லண்டன், பிப் 13—கால் நடைகளின் 'கிலிரண்' களிலிருந்து தயாரிக்கப்படும் 'கோர்டிஸோன்' என்ற மருந்தை இஞ்செக்ஷன் செய்துகொள்வதன் மூலம் சுமார் 100 வயதிலிருந்து 200 வயதுவரை உயிர் வாழ முடியும் என்று பிரிட்டிஷ் இரசாயன சங்கத் தலைவர் சர் இயான் ஹெயில்பர்ன் சர்வகலாசாலை மாணவர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

எவ்வளவு ஆண்டுவரை இதன் மூலம் உயிர் பெற்றிருக்கலாம் என்பதைத் நன்றாய் திட்டமாகக் கூற முடியாவிட்டாலும், ஆயுளை அதிக காலம் ஜீவித்திருக்க முடியும் என்று அவர் கூறினார்.

இம்மருந்து உண்மையிலேயே சக்தி அளிக்கக்கூடியதென்று ஆராய்ச்சியில் தெரியவந்ததாகவும் ஒரு இஞ்செக்ஷனுக்கு 50 டாலர் செலவாகிறதென்றும் கூறினார். கால்நடைகளிலிருந்து தயாரிக்கப்பட வேண்டியிருப்பதால் சப்ளை மிகவும் குறைவாக இருக்கிறதென்றும், ஆப்பிரிக்காவில் நைஜீரியா பிரதேசத்தில் கிடைக்கும் ஒருவித மூலிகையிலும் இம்மருந்து தயாரிக்கலாம் என்று தெரியவருகிறதென்றும், அதில் வெற்றிபெற்றால் இம்மருந்து தாராளமாகக் கிடைக்கச்செய்வோம் என்று அவர் பின்னர் நிருபர்களைச் சந்தித்தபோது கூறினார்.

நல்லாட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய மற்றொரு முக்கிய பிரச்னையாகும். நூற்றுக்கு 15 பேர்கள் கூட அல்லாத ஒரு பழைய வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கும்பலின் பிரதிநிதிகளே, இன்றைய புத்தாட்சியின் கர்த்தாக்களாகும். இங்ஙனம் மிகச் சிறுபான்மையினரின் வாக்கு பெற்றவர்களால் ஆக்கப்பட்ட ஆட்சியைக் குடியாட்சி என்று சொல்லுவது, கண்ணிரண்டுமில்லாதானைக் கண்ணாயிரம் என அழைப்பதுபோலவே யாகும். பதினைந்துபேர் கூடி ஆக்கிய திட்டத்துக்கு எண்பத்தைந்து பேர் அடிபணியவேண்டும் என்பதுதான் ஜனநாயகக் குடியரசா?

எனவே எவ்வழியில் ஆராய்ந்து பார்க்கினும் இப்புத்தாட்சி முறை, நம்முடையதென்றோ, நலமுடையதென்றோ கூறமுடியாததாகவேயிருக்கிறோமாம். இங்ஙனம் நம்முடையதும் நலம் பயக்க முடியாததும் ஆன இவ்வரசியலுக்குத்தான் அழகுமலராய் பூக்கிறார் செங்கல்வராயன். நமது முன்னேற்றத்துக்கு இந்த அரசியல் அமைப்பை எங்ஙனம் பயன்படுத்திக்கொள்ள முடியும். அடிப்படையே கோணலாயிருக்கும்போது? ஒரு அரசியலை மக்கள் தமது முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானால், அதற்கு அடிப்படை தேவையான பேச்சு சுதந்திரமும், எழுத்துச்சுதந்திரமும்போதிய அளவு இருக்கவேண்டும் அது இவ்வாட்சியில் நடைமுறையில் உண்டா என்று கேட்க விரும்புகிறோம். பகுத்தறிவு ஏடுகள் பறிக்கப்படும் அலங்கோலத்தை இங்குதானே அதிகமாகக் காண்கிறோம்! இத்தகைய கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே, நாடு நலம் பெறுவதெங்கே, முன்னேற்றம் காண்பது எப்போது, என்பனவற்றை எண்ணிப் பார்க்கவேண்டாமா?

வருமான வரி கொடுக்க பிரபல நகைச்சுவை நடிகரின் மறுப்பு

ஹாம்பர்க், பிப். 13—உலகிலேயே பிரபல காமெடியன் என்று பெயர் பெற்ற பிராக் என்பவர், தன் 70-வது வயதில் மீண்டும் மேடை ஏறி நடிக்க ஆரம்பித்திருக்கிறார் ஒருநாள் இரவு நாடகத்தில் தோன்றினால் இவர் ரூ 1810 வாங்கி விடுகிறார். இவர் பிரிட்டன் செல்ல உத்தேசித்திருக்கிறார். பிரிட்டிஷ் அதிகாரிகள் இவரிடமிருந்து 1924 முதல் வருமான வரியாக ரூ. 65,000 வரவேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் அதைக் கொடுக்கும் எண்ணம் தனக்கில்லை என்று அவர் கூறுகிறார்!

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

சென்னை மவுண்ட்ரோடு

சென்னை, பிப் 12—

11-2-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு மவுண்ட்ரோட்டிலுள்ள எலிபிஸ்டின் "திராவிட முன்னேற்றக் கழக மவுண்ட்ரோடு கிளை" துவக்கி வைக்கப்பட்டது. மேடை அழகிய மின்சார விளக்கினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமைவகித்து பேசுகையில், தி. மு. கழகத்தின் அவசியத்தையும், நாட்டிலுள்ள கோளாறுகளையும் எடுத்துக்காட்டி திராவிட நாட்டின் பல விதங்களில் மக்கள் படும் அவலங்களைக் கூறி தங்களது 'மத்ய அரசு' ஏற்பட்டு ஒரு கட்சியினரால் வகுக்கப்பட்ட இந்திய சட்டத்தில் எப்படித் திராவிட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் காங்கிரஸ் மந்திரிகளின் கோலங்களையும் விளக்கிச் சுமார் அரை மணி நேரம் மிக விரிவாகப் பேசினார்கள். பிறகு தோழர் என். [illegible] அவர்கள் கழகக்கொடியை ஏற்றிவைத்து அதன் கருத்தையும் காங்கிரஸ் சர்க்காரின் அலங்கோல ஆட்சியையும்— ஊதாரிச்செலவையும் விளக்கி, விரிவானதோர் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து கடைசியாக தோழர் க. அன்பழகன் பேசுகையில் தி. மு. கழகம் வளர்ந்த விதத்தையும் நாட்டில் நடக்கும் வேற்றுமைகளை விளக்கி, சாதியற்ற சமூகத்தை நிறுவ, நல்லாட்சியான தி. மு. கழகத்தினால்தான் முடியும் என்று பல சான்றுகளுடன் 1 மணி நேரம் விளக்கமாகப் பேசினார்.

கடைசியில் தோழர் கா. அண்ணாதுரை, கழக [illegible] வேலையின் நன்றி கூறக் கூட்டம் வாழ்த்தொலிகளுடன் முடிந்தது.

திட்டகுடி

திட்டகுடி, பிப். 12—

11—2—50 சனியன்று மாலை 5-மணிக்கு திட்டக்குடி ரேடியோ மைதானத்தில் தோழர் [illegible] சாமி அவர்கள் தலைமையில் இவ்வூர் தி. மு. க. துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர் கே. அரசு அவர்களும், ஜி. [illegible] அவர்களும் துவக்க விழாவின் நோக்கத்தைப்பற்றி சில நிமிட நேரம் பேசினார்கள். பிறகு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுமார் 1-மணி நேரம் நீண்ட சொற்பொழிவு ஆற்றினார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் திட்டக்குடி தோழர்கள் என். தங்கவேலு, கே. அரசு, ஆர். பூலோகம் அவர்கள் திராவிட பண் இசைத்தார்கள். கூட்டத்துக்கு பெருவாரியாக, வெளியூர் உள்ளூரிலிருந்தும் மக்கள் குழுமியிருந்து அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுமார் 7 மணிக்கு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவு முடிந்த பின் தலைவர் முடிவுரை கூற கூட்டம் இனிது முடிந்தது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, மகல், இரவு இருவேளையும் இவ்வூர் பிரபல பெருநிலக்கிழாரும், பஞ்சாயத்து கோர்ட் பிரசிடெண்டுமான கெ. பழனியாண்டி அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது.

அரங்கல் துருகம்

அரங்கல்துருகம், பிப். 6

ஆம்பூர் வட்டம் அரங்கல் துருகம் கிராம தி. மு. கழக சார்பில் [illegible] விழா 4—2—50 மாலை 5 மணிக்கு முடிந்ததும் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையின் கீழ் பரிசுகள் வழங்கப்பட்டன.

[illegible], வட்ட தி. மு. க. செயலாளர் ஆர். ரங்கசாமி, கிராம மாணவர் [illegible] கிராம மாணவர் [illegible] கல்வி அவசியம் வேண்டும். பிறகு [illegible] ஆட்டக்கூடிய புத்தகங்களை வாசித்தால்தான் தெளிவு பிறக்கும் என்பதை [illegible] நம்பும், எஃகு உள்ள [illegible] உள்ள கிராம மாணவன் பக்தி நடையில் செல்லும் மனத்தெளிவு வழிக்கே வர இயலாது. ஆனால் நல்ல தெளிவுப் பணி ஆற்றும் தி. மு. கழகத்தில் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி முடித்தார்.

பின்பு தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில் பட்டித்தொட்டிகளில் தி. மு. கழகம் இருந்தாலும் மலைப்பிரதேசத்திலுள்ள இவ்வூரில்கூட ஏற்பட்டிருப்பதைக் காணும்போது [illegible] என்றும். ஜில்லா போர்டு தேர்தலுக்கு வந்த தோழர் [illegible] வெற்றி கிடைத்தமையின் இருக்கும் இடம் [illegible] பெரிய மன் இருக்கிறது. அவர்களை கிராம பெரியோர்கள் [illegible] என்று கேட்க துணிய வேண்டும் என்றும் முடியாதால் திராவிட நாட்டுக்கு [illegible] எந்தப் பிராமணீயத்தால் வந்த கேடும் அதனால் இன்று [illegible] எவ்வளவு சிறப்பாக எடுத்துக் கூறினர். புராணங்களின் ஆபாசங்களை இவ்வாறு சில கூற்றை எடுத்துக்கூறி சுமார் 7-30க்கு கூட்டம் முடிந்தது.

தலைமை வகித்த தோழர் ஆர். ராகவையா அவர்களின் வீட்டில் இரவு உணவு முடிந்தபின் திருவண்ணாமலைக்கு புறப்பட்டார்.

மானூர்

மானூர்: பிப் 10—

5—2—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு, பொதுச் சாவடி முன்புள்ள மைதானத்தில், தி.மு. கழகத் துவக்கவிழா தோழர் எஸ். என். அய்யன் அவர்கள் தலைமையில் தோழர் ஏ. பிச்சைமுத்து அவர்களால் திராவிடப் பண் பாடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

தலைவர் முகவுரையில், ஒரு காலத்தில் நம்நாட்டில் நாகரிக மக்களாக உயர்ந்து வாழ்ந்தோம். இடையிலே [illegible] தாழ்த்தப்பட்டோம். தமிழர்களுக்குத் தலைமையைத் தமிழகத்தின் அறிவு மன்னன் அண்ணா [illegible] அனைத்து உயிர்களுக்கும் அன்பு செலுத்துவனே அந்தணன் என்றும்— திருக்குறள் ஒன்றுதான் எமது தமிழ் வேதமென்றும்— ஒன்றே குலமும், ஒருவனே தேவனென்றும் விரிவாகவும், விளக்கமாகவும் கூறினார்.

பின்பு முனி தோழர், தமிழரசு பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விரிவாக எடுத்துக் கூறினார். மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் நாட்டில் பகுத்தறிவுள்ள [illegible] வேண்டும் என்றும் அப்பகுத்தறிவுக் கொள்கையைத்தான் இக்கழகம் பரப்பி வருகிறது. என்றும் நமது திராவிட நாட்டுப் பாமரர் நிலை [illegible] சமுதாய [illegible] சூத்திரர், பஞ்சமர் என்ற இழிவுப் பெயர்களை அகற்றி, இன எழுச்சி கொள்ள வேண்டும் என்றும் [illegible] அரசு என்று [illegible] கூட்டத்தின் ஏராளமாக நாட்டில் இருக்கின்றன இவைகளை ஒழித்தாலன்றி இதை ஜனநாயக ஆட்சி என்று கூற முடியாது. என்று மிக விரிவாகப்பேசினார்.

தோழர் ச. [illegible] பேசுகையில், நாட்டில் ஆரியர் புகுந்ததால் நமது நாகரீகம் நாசமாக்கப்பட்டது. திராவிட மக்கள் நலிவுற்றனர்—ஆகவே ஆரியர் ஆதிக்கத்தை [illegible] நமது இனம் நல்ல முறைக்கும்— நாட்டின் மக்கள் என்று கருத முடியாதெனவும்—அரசாங்கம் நமக்கு விதிக்கும் அடக்குமுறைகளை அமைதியான முறையில் சமாளித்து, அநீதிகளை அறவே ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும்— பட்டி, தொட்டிகளிலுள்ள பாமர ஏழை விவசாயிகளிடத்தில் அரசாங்கம் அநீதியான வரிகளையும், விவசாயிகள் [illegible] கேட்பதும் [illegible] வும் கூறினார்.

பின் தோழர் சபாபதி பிள்ளை பேசுகையில் யார் திராவிடர்கள் திராவிடர்களுடைய சமுதாயம் [illegible] — மத [illegible] சீர்திருத்தத்தை நாட்டில் முதன் முதலில் பரப்பியது, திராவிட இயக்கம் ஒன்றுதான் எனவும்—விளக்கமாகவும் விரிவாகவும் கூறினார்.

மாணவர் [illegible] திராவிட [illegible] வேண்டுமானால் போர் தேவை எனவும்—அப்போர் அண்ணாவின் அறிவுரைப் போராக அமைய வேண்டுமெனவும் கூறினார். பின் தலைவர் முடிவுரையில் நாம் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றவேண்டும் எனக் கூறினார். பின் கழக [illegible] உறுப்பினர் தோழர் [illegible] நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

[கி-உ.]

சர்ச்சிலுக்கு மேஜை பரிசு

சர்ச்சிலுக்கு அமெரிக்க [illegible] குழந்தைகள் "அட்லாண்டிக் சாசன மேஜை" என்ற ஒரு அழகிய மேஜையைப் பரிசாக அளித்திருக்கின்றனர்.

சர்ச்சிலே இம்மேஜைக்கான மாதிரியை சொல்லிக் கொடுத்து இம்மேஜை தயாரிக்கப்பட்டதாம். இந்த மேஜையின் மேலுள்ள மூலையில் பிரிட்டனையும் அமெரிக்காவையும் ஒரு [illegible] செதுக்கப்பட்டிருக்கிறது.

உற்சாகமும், சுறு சுறுப்பும் தேவை

(0)

இரயில்வே சிப்பந்திகளுக்கு சுற்றறிக்கை

சென்னை, பிப். 13—

"நீ உன் வேலையை மிகவும் உற்சாகத்துடன், சுறுசுறுப்புடன் செய்" என்று இரயில்வே சிப்பந்திகளுக்கு சமீபத்தில் ஒரு சுற்றறிக்கை வந்திருப்பதாகத் தெரிகிறது

சமீப காலத்தில் இரயில்வே அதிகாரிகளுக்குச் சில இரயில்வேசிப்பந்திகள் வேலையை நன்றாகச் செய்வதில்லை என்றும், ப்ளாட்பாரங்களிலோ, டீ கடைகளிலோ அல்லது வெற்றிலை பாக்குக் கடைகளிலோ பொழுது போக்குவதாகவும் சில புகார்கள் வந்துள்ளன.

இதனால் பொது மக்களுக்கு ரயில்வே சிப்பந்திகள் தங்கள் வேலையின்மீது உற்சாகம் காட்டுவதில்லை என்ற ஒரு எண்ணம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது.

இந்த அபிப்பிராயத்தைப் போக்குவதற்கு, மேற்கண்டுள்ள போதனையை ரயில்வே அதிகாரிகள் தங்கள் சிப்பந்திகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பொது மக்களிடையே மரியாதையுடனும், கௌரவத்துடனும் நடப்பதைப் போல், உற்சாகத்தைத் தங்கள் வேலையில் அவர்களுக்குக் காட்டுவது மிகவும் இன்றியமையாதது என்று, அச் சுற்றறிக்கையில் கூறியுள்ளார்.

இப்போதனையை அசட்டை செய்யும் சிப்பந்திகளைச் சில எச்சரிக்கை கொடுத்த பிறகு குரூப் ஆபிஸர்கள் அவர்களின்மீது ஒழுங்கீன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அதிகாரிகள் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்

பெவின் பாமிதத் இடையே பலத்த போட்டி

லண்டன், பிப். 10—

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தோழர் பாமிதத் கம்யூனிஸ்ட் அபேட்சகராகவும், தோழர் [illegible] அபேட்சகராகவும் போட்டியிடுகின்றனர். இவ்விருவர்களும் இந்தியர் [illegible]. தோழர் பாமிதத் கிழக்கு [illegible] தொகுதியில் தோழர் பெவினை எதிர்த்துப் போட்டியிடுகிறார். அத்துடன் மற்றும் இரு கட்சி அபேட்சகர்களும் அங்கு போட்டியிடுகின்றனர். பாமிதத்தை பல இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் ஆதரிக்கின்றனர் என்றாலும், சில இந்தியர்கள் பெவினுக்காக வேலை செய்கின்றனர். நிச்சயமாக பாமிதத் இத்தடவையும் தோல்வியுறக்கூடும் என்று, பெவினின் தேர்தல் ஏஜெண்ட் கூறுகிறார்.

மேற்கு வில்லெஸ்டன் தொகுதியில் இந்தியர் [illegible] அபேட்சகரை எதிர்த்து மூவர் போட்டியிடுகின்றனர். இப்போட்டி பலமாக இருந்தாலும் [illegible] தனக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே இருக்கிறார்.

கரும்பிலிருந்து காகிதம்!

நியூயார்க், பிப். 11—

கரும்புச் சக்கைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட காகிதத்தில் மஸாசுசெட்ஸ் பத்திரிகையான 'ஹோல்யோக் டிரான்ஸ்கிரிப்டின்' முதல் இதழ் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இக் காகிதத்தில் அச்சு மிகவும் நன்றாக விழுகிறதாம் —குளோப்

குட்டி & ராவ் கம்பெனி தொழிலாளர்கள் 'உள்ளிருப்பு' வேலை நிறுத்தம்

5 நாள் அறப்போரில் 6 பேர் வேலை நீக்கம்: இருவர் மருத்துவ விடுதியில்!

முதலாளியின் மூர்க்கத்தனமும், முரட்டுப் பிடிவாதமும்

சென்னை, பிப். 10—

சென்னை பிராட்வேயிலுள்ள குட்டி அண்டு ராவ் கம்பெனித் தொழிலாளர்கள் நேற்று பகல் 1 மணி முதல் உள்ளிருந்து கொண்டே வேலை நிறுத்த செய்துள்ளார்கள். வேலையிலிருந்து ஆறு தொழிலாளர்களை நீக்கிவிட்டதே வேலை நிறுத்தத்திற்கு முக்கிய காரணமாகத் தெரிகிறது. மீண்டும் அந்தத் தொழிலாளர்களை வேலையிலமர்த்த வேண்டுமென்றும் கூலி உயர்வு (ஆளுக்கு 0-2-0) கோரியும், பஞ்சப்படி (28-0-0) கோரியும், 2 மாத போனஸ் கோரியும், விடுமுறை வசதி வேண்டியும் இந்த உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னை, பிப் 13—

[illegible] தொழிலாளர்களின் கோரிக்கைகள் இன்னும் கவனிக்கப்படாததால் அவர்கள் இன்னும் [illegible] யுள்ளனர். அவர்களின் குறைகளை எடுத்துப் பேசியவர்களான தோழர்கள் (1) [illegible], (2) சவின்ராஜ், (3) சோஸப்பா (4) முனிசாமி, (5) முருகன், (6) மல்லையா ஆகியோரை [illegible] கம்பெனி முதலாளி நீக்கிவிட்டார். ஆனால் முதலாளி வாக்கவுட் செய்ததாகவும், எல்லாத் தொழிலாளர்களையும் நீக்கிவிட்டதாகவும் நோட்டீஸ் போட்டுவிட்டாராம். இப்பொழுது அத்தொழிலாளர்கள் கம்பெனிக்குள்ளேயே இருந்து பட்டினியாய் வாடுகிறார்கள். முதலாளியைக் கேட்டால் "நான் ஒரு சோஷலிஸ்ட் தந்திரத்தின்படிதான் செய்வேன் நீங்கள் பணிபுரியுங்கள்" என்று கூறினாராம். இதுவரை லேபர் டிபார்ட்மெண்டும் வந்து சமரசம் செய்து வைக்கவில்லை. இதுவரை இரண்டு தொழிலாளர்கள் பட்டினியால் வாடி மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சிட்னி, பிப். 13—

ஆஸ்திரேலியாவில் பெட்ரோல் ரேஷன் எடுபட்டுவிட்டது. யாரும் தேவைக்குமீறி [illegible] வில்லை என அறிவிக்கப்படுகிறது.

வாசகர்களுக்கு!

20—2—1950 முதல் "மாலை மணி" உலகச் செய்திகளைத் தாங்கி பெரிய அளவில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

'மாலை மணி' ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கி பூராவையும் 16-2-'50குள் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குக் கட்டாயம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

"மாலை மணி" பதிப்பகத்தார்.

★ நாட்டு நடப்பு ★

மறுமலர்ச்சி நடிகர் மன்றம் ஆரம்ப விழா

பம்பாய், பிப். 6—

மேற்படி மன்றத்தின் ஆரம்ப விழா 5 2 50 ஞாயிற்றுக்கிழமை பம்பாய் (தாராவி) லேபர் வெல்பேர் செண்டர் ஹாலில் பிற்பகல் 12 மணிக்கு சினிமா நடிகர் தோழர் எஸ். எம். குமரேசன் தலைமையில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. பல முக்கியஸ்தர்களும், சினிமா நடிகர்களும், தோழர் பி. ஜி. வெங்கடேசன் உள்பட குழுமியிருந்தனர். ஆயிரக்கணக்கான மக்களுக்கிடையில் மன்றத்தின் அங்கத்தினர்களின் இன்னிசை விருந்துடன் விழா ஆரம்பமாகியது.

விழாத் தலைவர் தோழர் எஸ். எம். குமரேசன் தன் முகவுரையில் நாடக மேடைக்கும், வெள்ளித் திரைக்குமுள்ள வேறுபாட்டை விளக்கிப் பேசுகையில் 'நடிப்புக் கலை உள்ளத்தே உறையும் உணர்ச்சியின் அங்க அசைவின் மூலம் வெளிக்கொணரும் கருவியென்றும், இன்றைய தமிழ் சினிமாக்கள் உன்னதமடைவதற்கு ஊன்றுகோலாயிருந்தது நாடக மேடையே என்றும், இன்று தமிழ் நாட்டில் நாடகக் கலைக்கு முதலிடம் அளிக்கப்படுவதாகவும், மன்றத்தின் நடிகர்கள் நடிப்புக்கலையிலே முன்னணிக்கு வரவேண்டுமென்றும்" கூறி முடித்தார். ஆசிரியர், எம். ஏ. ராஜா, வி. வி. ஆழ்வார், பி. ஆறுமுகம், ஆர். ராஜா ஆகியவர்கள் கலையின் சிறப்பினைக் குறித்துப் பேசினார்கள். நடிகர் பி. ஜி வெங்கடேசன் கூட்டத்தினருக்குத் தன்வணக்கத்தைத் தெரிவித்தார். நன்றி கூறும் முகத்தான் மன்றத்தின் மானேஜிங் டைரக்டர் தோழர் டி. சாமுவேல் கலையிலே ஆர்வமுள்ள தோழர்கள் மன்றத்தில் அங்கம் வகிக்க முன்வர வேண்டுமென்றும், நடிகர்கள் எஸ். எம். குமரேசன், பி. ஜி வெங்கடேசன் போன்றவர்கள் விழாவிற்கு வருகை தந்தமைக்கு மன்றத்தினர் கடமைப்பட்டிருப்பதாகவும், குழுமியுள்ள கூட்டத்தினர்க்கும் தனது நன்றியைத் தெரிவிக்க, குழுப் புகைப்படமொன்று எடுக்கப்பட்டு, தேநீர் விருந்துடன் விழா முடிவுற்றது.

அர்ச்சுனன் நினைவு மன்றம்

தஞ்சை, ஜன. 18—

இம்மன்ற சார்பில் 14-1-50 அன்று மானம்புச்சாவடி இடையர் தெருவில் பொங்கல்விழாமிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல கட்சித்தோழர்களான தஞ்சை காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தோழர் வெங்கிடகிருஷ்ணபிள்ளை, சோஷியலிஸ்ட் காரியதரிசி (பட்டுக்கோட்டை) எல். வேதாசலம், மற்றும் இயக்க அன்பர்கள் எஸ். எஸ். மணி, ஆர். இராசகோபால் முதலியோர் அழகாக தமிழர் விழா பற்றிப் பேசினர்.

செ. ஏ. இ. பள்ளி—சென்னை

புரசை, பிப். 6—

செங்கல்வராயன் ஏழைச் சிறுவர் இலவச விடுதி பழைய மாணவர்கள் சார்பாக நடந்த 5-2-50 ஞாயிறு மாலை ஓர் பொதுக்கூட்டம் தோழர் தமிழ் வித்வான் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் கூடிச் சேர்ந்தது. அதுபோது தோழர் கோ. அருளாளன் அவர்கள் 'குடியாட்சியும இந்தியாவும்' என்பதைப்பற்றி குறிப்பாக எட்டவே குடியரசு தமிழ்நாட்டிற்கு ஒரு நன்மையும் இல்லை என்று விரிவாகச்சொற்பொழிவாற்றினர். பிறகு தலைவர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

தொல்காப்பியர் மன்றம்

நெல்லை, பிப். 6—

மேற்படி மன்றத்தின் சார்பில் சென்ற ஞாயிறன்று 5-2-50 வள்ளுவர் தினவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் இலக்கிய அமரன் பி. ஏ. (ஹானர்ஸ்) அவர்கள் தலைமை வகித்து 'வாழ்வளித்த வள்ளுவர்' என்ற தலைப்பில் அரியதோர்சொற்பொழிவாற்றினர். தோழர் இரா. இளங்கோ, தேவன், குருசாமி, சுப்பிரமணியம், இராமமூர்த்தி முதலியோர் தொடர்ந்து பேச தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

இளைஞர் முன்னேற்றக் கழகம்

எட்டயபுரம் பிப். 10—

5-2-50 ஞாயிறு அன்று தோழர் எம். ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது தோழர் 'கலிங்கன்'' 'திராவிடர் நிலை'பற்றியும்; திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரவேண்டிய அவசியம் பற்றியும், சுமார் ஒரு மணிநேரம் பேசிய பிறகு, தோழர் எஸ். சுப்பையா, எம். ராமகிருஷ்ணன், எம். ராமசுப்பையா ஆகியவர்கள் பேசினார்கள், பிறகு, "இளைஞர் முன்னேற்றக் கழகம்" அமைக்கப்பட்டது.

கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் :—எம். ராமகிருஷ்ணன்; துணைத்தலைவர் :—கே. முத்துவேல்; செயலாளர் :—எஸ். சுப்பையா; துணைச் செயலாளர் :—ஈ. பி. மகாலிங்கம்; பொருளாளர் :—எஸ். சிவகுருநாதன்.

தீர்மானம்-தி. மு. கழகத்துடன் ஒத்துழைத்து திராவிடர் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்குப் பாடுபடுவதென்றும், தோழர் அண்ணாதுரை அவர்கள் எட்டயபுரம் வரும்பொழுது வரவேற்பு இதழ் வாசித்தளிப்பதென்றும், திருச்சி, சென்னை, கணியூர் மாநாட்டுத் தீர்மானங்களை அங்கீகரிப்பதுடன், அவைகளை அமல் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிச் செய்தி!

1949, டிசம்பர் 20-ந் தேதி முதல், 1950, ஜனவரி 26-ந் தேதி வரை ஹைதராபாத்தில் நடந்த அகில இந்திய கைத்தொழில் பொருட்காட்சியில்,

எமது சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனிக்கு,

கம்பெனியின் தயாரிப்புகளைப் பாராட்டி, பொருட்காட்சி கமிட்டியாரின் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்த ஹைதராபாத் பிரதமர் கனம் எம். கே. வெள்ளோடி ஐ சி எஸ் அவர்களால்

எமக்கு முதல் பிரைஸ்

கிடைத்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

சைபால்	ரமணீஸ் பேபி கிரைப்	அயோடிசால்
சொறிசிறங்கு, முகப்பரு, சேத்துப்புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.	குழந்தைகளுக்கு ஏற்படும் சகல அஜீரணக் கோளாறுகளைப் போக்குவது,	இரதத விருத்தி, இரத்த சுத்திக்கு நிகரற்ற டானிக்.

சௌத்இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை

வாங்கிவிட்டீர்களா ?

அண்ணாவின் அழகிய இரு வர்ணப்படம் அமைந்ததும் பிப்ரவரி முதல் அடுத்த 1951 ஜனவரி வரை பெரிய அளவில் மாதங்கள் கொண்டதும் (சென்ற மாதம், நிகழும் மாதம், வரும் மாதம் என மூன்று பிரிவுகள் கொண்டது) பல வர்ணங்களில் அச்சிடப்பட்ட

முன்னேற்றப் பண்ணை

காலண்டர்—1950

விலை அணா ஐந்து

வியாபாரிகட்கு 20% கழிவு உண்டு

புதிய புத்தகங்கள்

மு. கருணாநிதி		
வாழமுடியாதவர்கள்	...	0 12—0
பெரிய இடத்துப்பெண்	...	0—8—0
K. A. மதியழகன் B. A.		
அவதூறு வழக்கு	...	0—3—0
இரா. நெடுஞ்செழியன் M. A.		
மக்கள் மறுமலர்ச்சி	...	0—3—0
மனப்போக்கு மாறவேண்டும்	...	0—2—0
C. N. அண்ணாதுரை M. A.		
தேவலீலைகள்	...	0 8—0
மூலபலம் முறிகிறது	...	0—8—0
அண்ணாவின் உவமைகள்	...	0—8—0
அறநிலையங்கள்	...	0—6—0
பொருள்	...	0—4—0
நூல் நிலையங்கள்	...	0—3—0
அண்ணாவின் அறைகூவல்	...	0—3—0
அண்ணாவின் அறிவுரைகள்	...	0 3 0
அண்ணாவின் அடுக்குத்தொடர்	...	0—3—0
பரமசிவனுக்குப் பகிரங்கக்கடிதம்	....	0—3—0
புரோகிதன் முளைத்தான்	...	0—3 0
ஏ, சதிகார சமுதாயமே	...	0 2—0
திருடாதே (சிறுவர்களுக்கான சுவையான கதை)	...	0—1—6

வியாபாரிகட்கு 25% கழிவு அனுப்பும் சிலவு இனும் தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்குத் தபால் தலைகள் அனுப்பவும்

முன்னேற்றப்பண்ணை, 2/22, பிராட்வே, சென்னை 1.

திருமணங்கள்

சோழவந்தான் தோழர் அ. பொ. சௌந்திர பாண்டியனுக்கும், அருப்புக் கோட்டைத் தோழியர் மு. வேமரகதத்திற்கும் 29—1—50 அன்று தோழர் சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் அருப்புக் கோட்டையில் திருமணம் நடைபெற்றது. தோழர் எம். எஸ். இராமசாமி மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

திருத்தங்கல் தோழியர் செயலட்சுமிக்கும், (சென்னை வியாபாரம்) தோழர் எஸ். வி. சண்முக ராஜனுக்கும் 1—2—50-ல் மணமகள் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

குளித்தலை வட்டம், மைலபட்டி தோழர் பா. க. சை. முகம்மது யாகூபுக்கும் தோழியர் பாத்திமா பீபிக்கும் 23-12-49 ல் மணமகள் இல்லத்தில் சிறப்புடன் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் எம். சையது இப்ராகிம், பி எம் ஹனீபு ஆகியோர் பேசினர்.

திருவத்திபுரத்தையடுத்த சுமங்கலி கிராமத்தில் 9—2—50 அன்று திருவத்திபுரம் தோழர் வி. ஆறுமுகம் தலைமையில், தோழியர் நீலாவதி—தோழர் துரைக்கண்ணன் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. திருவத்திபுரம் மா. நா. இராசமாணிக்கம், புலவர். கோவிந்தன் ஆகியோர் பேசினர். தோழர் செல்லப்பா நன்றிகூற கூட்டம இனிது கலைந்தது. தோழர் பெருமாள் பி.ஏ. அவர்களின் பெரு முயற்சி பாராட்டத் தக்கது.

நேபாள பிரதமர் டெல்லி வருகிறார்

புதுடெல்லி, பிப். 10—

நேபாளத்தின் பிரதமரும் சேனாபதியுமான மகாராஜா மோகன் ஷம்ஷேர் ஜங்பகதூர் ராணா விசேஷ ரயிலில் பிப்ரவரி 17 தேதி புதுடெல்லி வருகிறார்.

இவர் இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரிலேயே வருகிறார். இவரை முதல் மந்திரி பண்டித நேரு ரயிலடியில் வரவேற்பார்.

இவர் புதுடில்லியிலுள்ள நிஜாம் அரண்மனையில் ஒருவாரம் தங்கியிருப்பார். அவருக்கு இர்வின் ஸ்டேடியத்தில் ராணுவ மரியாதையுடன் பட்டாக்கத்தி ஒன்று பரிசளிக்கப்படும்.

இவர் ஜனாதிபதி ராஜேந்திரபிரசாதையும், பண்டித நேருவையும் இதர மந்திரிகளையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

ரஷ்ய-சீன பேச்சுவார்த்தைகள்

முடியும் கட்டத்திலிருக்கிறது

டிசம்பரில் ஆரம்பமான ரஷ்ய-சீனபேச்சு வார்த்தைகள் முடிவடையும் கட்டத்தை அடைந்து வருவதாக சொல்லக்கூடிய அறிகுறிகளைக் கொண்ட செய்திகள் மாஸ்கோவிலிருந்து இங்கு கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த உடன்படிக்கை விவரம் சீக்கிரமே வெளியிடப்படும் என்று, மேனாட்டு ராஜதந்திரிகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். மாஸ்கோவில் தங்கியிருப்பதை சீனா வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று ஒயிட்ஹால் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஓசையின்றி துணி வெளுக்கும் இயந்திரம்

லண்டன், பிப். 13—

எவ்வித ஓசையுமின்றி துணிகளை வெளுக்கும் ஒரு மின்சார இயந்திரத்தை ஒரு பிரிட்டிஷ் ரேடியோ உற்பத்தி கம்பெனி கண்டுபிடித்திருக்கிறது.

திருத்தம்

"மாலை மணி" (வெளியூர் 10—2—50) இதழில் விற்பனையாளர்கள் தேவை என்ற தலைப்பில் வெளியான அறிவிப்பில் மதுரை என்றிருப்பதை மானா மதுரை எனக் கொள்க. [ஆ—ர்]

Printed & Published by T. M. Parthasarathy at the MercantilePress 2/45, Muthumari Chetty Street Madras-1